**தலைப்பு 420 - மகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பறிக்கை 2022 ஜுன் 01 ஆந் திகதி க்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஆகஸ்ட் 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சின நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்குஇணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத்தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றதாக,

(ஆ) முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **மொத்த ஏற்பாடு மற்றும் செலவுகள்** | | |
| (i) | நிகழ்ச்சித்திட்ட இலக்கம் 1 மற்றும் 2 இன் கீழ் 3 மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ஏற்பாடு ரூபா 10,600,000 ஆன மொத்த ஏற்பாடும் அதாவது நூற்றுக்கு 100 சதவீதமும் எஞ்சியிருந்தது. | 2021 ஆண்டில் உலகில் நிலவிய கோவிட் தொற்று நிலைமை காரணமாக வெளிநாட்டு சுற்றுலாக்களில் ஈடுபடாமை, இராஜாங்க அமைச்சு ஆளணி உத்தியோகபூர்வ சீருடை கோராமை, வளர்நதுவரும் வலயங்களில் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளின் கீழ் குத்தகை அடிப்படையில் பெற்ற வாகனங்களுக்கு வட்டி செலுத்துவதற்காக பாதீட்டு மதிப்பீடின் மூலம் 420-2-3-12-1406-0/12 கீழ் ஏற்பாடு வழங்கியிருந்த போதும் பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் BD/GPS/155/08/03 மற்றும் 2021.07.13 கடிதம் பிரகாரம் நிர்வாக மற்றும் நிருவன செலவின விடயத்தை ஏற்படுத்தி நி.பி. 66 மூலம் ஏற்பாட்டை பெற்றுக் கொண்டு செலவிடல் போன்ற காரணங்களால் ஏற்பாடு எஞ்சியுள்ளது. | மதிப்பீடு தயாரிக்கும் போது நடைமுறைக்கு அசாத்தியமல்லாத முறையில் தயாரிப்பதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிகழ்ச்சித்திட்ட இலக்கம் 1 மற்றும் 2 இன் கீழ் 12 மூலதன செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ஏற்பாடு ரூபா 113,000,000 ஆன மொத்த ஏற்பாடும் அதாவது நூற்றுக்கு 100 சதவீதமும் எஞ்சியிருந்தது. | நாட்டில் நிலவிய சீரற்ற சுகாதார நிலைமையின் மீது பிரயாணம் மட்டுப்படுத்தப்பட்டமை, நாடு முடக்கப்பட்டமை, அலுவலர்கள் சுழற்சி முறையில் கடமைக்கு அழைக்கப்பட்டமை காரணமாக இயந்திர உபகரணங்களின் பாவணை குறைந்தமை, முறையாக நிறுவன செயற்பாடுகள் இடம்பெறாமை, வாகனங்களின் பாவணை குறைந்தமை, கராஜ் மூடப்பட்டமை காரணமாக பாரிய திருத்த வேலைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படாமை போன்ற பல காரணங்களால் ஏற்பாடு எஞ்சியுள்ளது. | - மேற்படி - |
| (iii) | நிகழ்ச்சித்திட்ட இலக்கம் 1 இன் கீழ் மீண்டுவரும் மற்றும் மூலதன செலவு விடயங்கள் 22 இல் மற்றும் 5 இல் ஏற்பாடுகள் பணமாக முறையே ரூபா 30,850,278 மற்றும் ரூபா 34,068,520 என பயன்படுத்தப்படாது எஞ்சியிருந்தது. அது சதவீதத்தில் 37 சதவீதம் மற்றும் 66 சதவீதமானது. | இராஜாங்க அமைச்சரிற்கு முழு வருடத்திற்கும் ஏற்பாடு ஒதுக்கப்பட்ட போதும் 2021 மார்ச் மாதம் நியமிக்கப்பட்டதால் அத்திகதி முதல் சம்பளம் செலுத்துதல், கோவிட் தொற்று நிலைமை, பிரயாணத் தடை காரணமாக இயந்திர உபகரணங்களின் பாவணை குறைந்தமை, மூலப்பொருள் பற்றாக்குறை காரணமாக கட்டிட பராமரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளாமை, அமைச்சு அலுவலகம் மற்றும் அலுவலர்கள் குழுவாக வாகனங்களை பயன்படுத்தியமை, இணைய வசதிகளை பெற்றுக் கொள்ளல் மட்டுப்படுத்தப்பட்டமை, உள்நாட்டு பிரயாணம் மட்டுப்படுத்தப்பட்டமை, அலுவலகங்கள் தொடர்ந்து நடாத்தப்படாமை, ஆதனக் கடன் பெற்றுக் கொள்ளும் அளவு குறைந்தமை, | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | | உள்ளூராட்சி தொடர்பாக இலங்கை நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் எதிர்பார்த்த படி இடம்பெறாமை போன்ற காரணங்கள் ஏற்பாடு எஞ்சுவதற்கு தாக்கம் செலுத்தியிருந்தது. | |
| (iv) | நிகழ்ச்சித்திட்ட இலக்கம் 2 இன் கீழ் 1 மீண்டுவரும் செலவு விடயம் மற்றும் 08 மூலதன செலவு விடயங்களில் ஏற்பாடுகள் முறையே ரூபா 266,251,558 மற்றும் ரூபா 3,250,590,966 ஆக பயன்படுத்தப்படாது எஞ்சியிருந்தது. அது சதவீதமாக 58 மற்றும் 72 சதவீதமானது. | நாட்டில் நிலவிய சீரற்ற நிலைமையின் காரணமாக எதிர்பார்த்த விதத்தில் செலவுகள் முன்வைக்கப்படாமை, கட்டிடப் பொருட்களின் பற்றாக்குறை, கொள்வனவு உறுதியற்றிருந்தமை, ஆளணி ஆட்சேர்ப்பு தாமதித்தமை, நாடு முடக்கப்பட்ட காரணத்தால் செயற்திட்டம் செயற்படாமை, எதிரிபார்த்த செயலாற்றுகையை அடைந்து கொள்ள முடியாமையின் மீது ஏற்பாடு எஞ்சியுள்ளது. | - மேற்படி - |
| (v) | மதிப்பீடு பெற்றுக் கொள்ளப்படாத 03 செலவின விடயங்களிற்காக திறைசேறி குறைநிரப்பின் (Supplementary) மூலம் ஏற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதும், அம் மொத்த ஏற்பாடு ரூபா 3,365,000,000 இலிருந்து (ஒரு செலவின விடயத்தில் 100 சதவீதம் உள்ளடங்களாக) பயன்படுத்தப்படாது ரூபா 2,785,686,782 தொகை எஞ்சியிருந்தது. அது சதவிகிதத்தில் 82 சதவீத மீதியானது. | பொது கல்வி நவீனமயமாக்கல் நிகழ்சித் திட்டம் தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினைக்குரிய நிலைமை காரணமாக வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடு ஒதுக்கப்படவில்லை. 2021 மார்ச் மாதத்தில் பிரச்சினைகளை தீர்த்துக் கொண்ட போதும் பிரயாண மட்டுப்படுத்தல் விதித்ததால் ஏற்பட்ட சீரற்ற நிலைமையின் கீழ் திட்டமிட்டவாறு செயற்பாடுகள் இடம்பெறாமையும் ஏற்பாடு எஞ்சுவதற்கு காரணமானது. | - மேற்படி - |

(ஆ) மதிப்பீடு தயாரித்தல்

---------------------------------

| | | |
|---|---|---|
| அமைச்சின் செலவின மதிப்பீட்டை தயாரிக்கும் போது நி.பி 50 இனூடாக வலியுறுத்திய விடயங்கள் தொடர்பாக கவனம் | அமைச்சின் செலவின மதிப்பீட்டை தயாரிக்கும் போது நி.பி 50 இன் ஏற்பாடுகளுக்கு இணங்க | சரியாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்படவில்லை என ஆரம்ப மதிப்பீடு மற்றும் திருத்திய மதிப்பீட்டிற்கு இடையில் பாரிய வித்தியாசங்கள் காணப்பட்டதனூடாக அவதானிக்கப்பட்டது. | முடியுமான அளவிற்கு பூரணமாக சரியாக தயாரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறாயினும் பல காரணங்களால், சில செலவின விடயங்களில் ஏற்பாடுகள் எஞ்சியமை, சில செலவின விடயங்களிற்கு ஏற்பாடு போதாமை ஏற்பட்டதால், மட்டுப்படுத்தப்பட்ட ஏற்பாட்டை சிறந்த முறையில் முகாமை செய்யும் நோக்கில் அந்த மீதியை, ஏற்பாடு நிலுவையாகவுள்ள செலவின விடயங்களிற்கு நி.பி 66 இற்கு இணங்க மாற்றப்பட்டுள்ளது. | |
| (இ) | மூலதன மாற்றல்கள்<br>-------------------------------- | | |
| | நிதிப் பிரமாணம் 1 பின்னிணைப்பு நியமப்படுத்தப்படட செலவின விடயத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வகைப்படுத்தலின் பிரகாரம் 2202 செலவின தலைப்பு இலாபம் பெறுவதை நோக்காகக் கொள்ளாத அரச நிறுவனங்களிற்கு மூலதன மாற்றலாக மேற்கொள்ள முடியுமாக இருக்கும் போது, உள்ளூராட்சி நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகளை அமைச்சின் மேற்பார்வையின் கீழ் கொடுப்பனவு செய்து செலவுகள் மூலதன மாற்றலின் கீழ் காட்டப்பட்டிருந்தது. வாசிகசாலை அபிவிருத்தி, வியாபார நிலையங்கள் அபிவிருத்தி, பாதை திருத்தத்தின் கீழான செலவுகள் ரூபா 157,842,515 மூலதன மாற்றலாக காட்டப்பட்டிருந்தன. | குறித்த ஏற்பாடு மேற் குறிப்பிட்டவாறு மூலதன மாற்றலின் கீழ் ஒதுக்கப்பட்ட போதும், மாகாண சபைகள் அல்லது உள்ளூாட்சி நிறுவனங்களிற்கு அவ் ஏற்பாடுகளை நேரடியாக மாற்றக்கூடியதாக இல்லை. ஏனெனில், ஏற்பாடு மாற்றப்பட்டால் அந் நிறுவனங்களிற்குரிய செலவுகளை கணக்கீடு செய்ய முடியாதுள்ளதாலாகும். அதன் பிரகாரம் அமைசசின் மேற்பார்வையின் கீழ் அப் தொகை செலவிடப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்ல வேண்டும். |
| (ஈ) | இலக்கம் 21/1596/304/134 மற்றும் 2021 ஆகஸ்ட் 28 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், நாட்டில் காணப்படும் நிலைமையினுள் செலவின கட்டுப்பாட்டிற்காக அரச செலவுகளை பிற்போடுவதற்கு பதிலாக அமைச்சுக்களின் செலவுகளை மீண்டும் மீளாய்வு செய்வதனூடாக செலவுகளை மட்டுப்படுத்திக் கொள்ள நடவடிக்கை | 2021.08.30 திகதிய அமைச்சரவை தீர்மாணத்தின் II பந்திற்கு அமைய அரசின் புதிய அபிவிருத்தி பிரவேசத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி செயற் திட்டங்களிற்காக அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் உத்தேச செயற்திட்டத்தை | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் செயற்பட்டு திறைசேரி நிதிக் கட்டுப்பாட்டிற்கு உதவ வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுப்பதனை மிகவும் பயனுள்ளதாகிக் கொள்ள உரிய அங்கீகாரத்தின் கீழ் ஏற்பாடு ஒதுக்கப்பட்டியிருந்த போதும் தற்போது ஆரம்பிக்கப்படாத நிர்மாணங்கள், கொள்வனவுகள், கட்டிட புனர்நிர்மாணம் மற்றும் மேம்பாடுகளை தற்காலிகமாக இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டிருந்தன. எனினும் அக்கடிதம் பெளியிடப்பட்ட பின்னரும், ரூபா 1,125 மில்லியனிற்கான செயற் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், இவைகள் தொடர்ந்தும் கடப்பாடுகளாக காணப்பட்டன. | தொடர்புபடுத்திக் கொள்ள வேண்டாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. | |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்தப்படல்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2017 ஏப்ரல் 27 திகதிய இலக்கம் 255/2017 கொண்ட அரச கணக்குகள் சுற்றறிக்கை பிரகாரம் முறையாக பெற்றுக் கொண்ட பண்டங்கள் மற்றும் சேவைகளுக்கு மற்றும் பூர்த்தி செய்த வேலைகள் உறுதி செய்துள்ள ஒப்பந்தங்களிற்காக தொடர்ந்தும் செலுத்த வேண்டிய பெறுமதிகளை பொறுப்பாக காட்ட வேண்டிய போதும் அவ்வாறு காட்டாது கடப்பாடுகளாக குறிப்பிட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அவ்வாறு காட்டிய 04 நிகழ்சித் திட்டங்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 12,338,519 ஆனது. | கடப்பாடு மற்றும் பொறுப்பு பதிவேட்டை தயாரிக்கும் போது குறித்த வவுசர்களை பரீட்சித்து கொடுப்னவிற்கு தயாராக இருந்த வவுசர்கள் மாத்திரம் பொறுப்பாக இனங்காணப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் மிக்க கவனத்துடன் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை இனங்காண நடவடிக்கை எடுக்க குறித்துக் கொண்டேன். | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | வளர்நது வரும் வலயங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்திட்டங்களிலிருந்து அமைச்சிற்கு சுவீகரித்துக் கொண்ட 10 வாகனங்களிற்காக தொடர்ந்தும் செலுத்த கடப்பட்டுள்ள குத்தகை பெறுமதியான ரூபா 65,573,680 கடப்பாட்டுப் பதிவேட்டில் காட்டப்படவில்லை. | அப் பெறுமதியை கடப்பாட்டு பதிவேட்டிற்கு உட்படுத்தி 2022 ஆண்டில் சரிசெய்து கொள்ள குறித்துக் கொண்டேன். | சரியாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டும். |

## 2.3 வைப்பு மீதிகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நி.பி. 571 பிரகாரம் 02 ஆண்டுகளை விஞ்சிய வைப்புக்களை வருமானக் கணக்கிற்கு செலவு வைக்க வேண்டிய போதும் 2 ஆண்டுகளை விஞ்சிய 136 வைப்புக்களின் பெறுமதி ரூபா 63,126,232 இனை வருமான கணக்கிற்கு செலவு வைத்திருக்கவில்லை. | இரண்டு ஆண்டுகளை விஞ்சிய வைப்புக்களினுள் முக்கியமாக உள்ளடங்குவது, ஒப்பந்த பட்டியல்களிலிருந்து கழித்துக் கொண்ட 10 சதவீத நிறுத்தற் பணமாவதுடன், இப் பணத்தை விடுவிப்பதற்காக உள்ளூராட்சி ஆணையாளர்களின் ஊடாக குறித்த கோரிக்கைகள் சமர்பிக்கப்பட வேண்டியுள்ளதால் அச் செயற்பாட்டிற்காக ஓரளவு காலம் எடுக்கின்றது. எவ்வாறாயினும் தற்போது காலம் கடந்த அனைத்து வைப்புக்களையும் அரச வருமானத்திற்கு செலவு வைப்பதாக அறிவித்துள்ளதால் குறித்த கோரிக்கைகளை சமர்பிக்காத அனைத்தையும் அரச வருமானத்திற்கு செலவுவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 571(3) ஏற்பாடுகளிற்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்களை பேணிக்கொள்ளாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 446 இல் குறிப்பிடப்படும் ஏற்பாடுகள் பிரகாரம் சிறுசெலவு காசுப் புத்தகத்தை நாத்தியிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடாத்திச் செல்ல ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 446(3) பிரகாரம் சிறு செலவு கட்டுநிதிக்காக மாத்திரம் கிடைத்த பணம் மற்றும் அதிலிருந்து மேற்கொண்ட செலவுகளை சிறு செலவு காசுப் புத்தகத்தில் குறிக்க |

| | | | |
|---|---|---|---|
| | | | வேண்டும். |
| (ஆ) | கடமை தொலைபேசி பதிவேடொன்றை பேணியிருந்த போதும், நிதிப் பிரமாணம் 845(1) 26 பின்னிணைபு படிவம் பிரகாரம் பதிவேட்டை பேணியிருக்கவில்லை. | உரிய முறையில் பேணிச் செல்ல தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 845(1) 26 பின்னிணைபு படிவம் பிரகாரம் பதிவேட்டை பேணிக் கொள்ள வேண்டும். |
| (இ) | நிதிப் பிரமாணம் 454(2) பிரகாரம் மின்சார உபகரணங்களை பேணியிருந்த போதும் நாளாதுவரையாக்கி இருக்கவில்லை. | நாளாதுவரையாக்கல் மேற்கொள்ளப்படுகின்றது. | நிதிப் பிரமாணம் 454(2) இல் காட்டப்படுவதன் பிரகாரம் அரச கட்டிடங்களின் அனைத்து மின்சார உதிரிப் பாகங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக பண்டக பதிவேடொன்றை நாளாதுவரையாக பேணிக்கொள்ள வேண்டும். |
| (ஈ) | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.2 வழிகாட்டி பிரகாரம் குழுவின் செயலாளரினால் தொழிநுட்பக் குழுவின் பதிவேடொன்றை பேணிக்கொள்ள வேண்டிய போதும் அவ்வாறு செய்திருக்கவில்லை. | அனைத்து தொழிநுட்ப மற்றும் மதிப்பீட்டுக் குழுக்களினதும் வரவு தொடர்பான பதிவேடொன்றை பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. | ஏற்பாடுகள் பிரகாரம் குழு செயலாளரினால் தொழிநுட்ப குழுவின் பதிவேடொன்றை பேணிக் கொள்ள வேண்டும். |
| (உ) | கணக்காய்வு ஐயவினா பதிவேட்டை, நாளாதுவரையாக்கி இருக்கவில்லை. | முறையாக மற்றும் நாளாதுவரையாக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 452(1) பிரகாரம் கணக்காய்வு ஐயவினா பதிவேட்டை, நாளாதுவரையாக்கி பேணிச்செல்ல வேண்டும். |
| (ஊ) | நி.பி 1647(உ) மற்றும் நி.பி 802 இற்கிணங்க வாகனங்களை பட்டியற்படுத்தும் பதிவேட்டை நாளாதுவரையாக்கி இருக்கவில்லை. | நாளாதுவரையாக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 1647(உ) பிரகாரம் வாகனங்களை பட்டியற்படுத்தும் பதிவேட்டை நாளாதுவரையாக பேணிக்கொள்ள வேண்டும். |

## 2.5 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பில் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக வினைத்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதி செய்ய வேண்டியதுடன் அம் முறைமையின் ஆக்கபூர்வ தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் முறைமையை வினைத்திறனாக நடாத்திச் செல்ல தேவையான மாற்றங்களை செய்ய வேண்டுமெனவும், அம் மீளாய்வுகளை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்ப வேண்டியிருந்த போதும், அவ்வாறான மீளாய்வொன்றை மேற்கொண்டதற்கான கூற்றை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வாளரினூடாக காணப்படும் உள்ளக கட்டுபாட்டு முறைமையை மீண்டும் மீளாய்வு செய்து அவ்வப்போது தேவையான ஆலோசனை வழங்குதல் மற்றும் நாளாதுவரையாக்கல் மேற்கொள்ளப்படும். | ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | உள்ளக கணக்காய்வு செயற்பாட்டை உரிய முறையில் செயற்படுத்த வினைத்திறனான முறைமையொன்று உள்ளதென கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதி செய்ய வேண்டிய போதும் இவ்வறிக்கையில் 4.1 பந்தியில் குறிப்பிடப்படும் அவதானங்களின் பிரகாரம் அத்தேவைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | - மேற்படி - |

**2.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

---

தெரிவு கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள் பின்வருமாறு பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1994 ஆகஸ்ட் 03 ஆம் திகதிய இலக்கம் 26/92(1) கொண்ட அரச நிர்வாக சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் அமைச்சின் அலுவலர்களிற்கு ஒதுக்கிய வாகனங்கள் தவிர ஏனைய அனைத்து வாகனங்களிலும் அரச இலட்சினை பொறிக்கப்பட வேண்டிய போதும், அவ்வாறு செய்திருக்கவில்லை. | அரச இலட்சினை இல்லாத வாகனங்களிற்கு அவை அச்சிடப்படும். அரச சொத்துக்களின் பாதுகாப்பிற்கு இவ்விலட்சினை 2022 மே 09 முதல் தற்காலிகமாக அகற்றப்பட்டுள்ளது. மீண்டும் உரிய முறையில் அவற்றை காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் ஆலோசனைக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 26/2016 கொண்ட அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 பந்தி | எரிபொருள் பாவணை பற்றிய பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. | நிலவிய கொவிட் தொற்று நிலைமை மற்றும் தற்போது நிலவும் எரிபொருள் பிரச்சினையின் மீது எரிபொருள் பாவணை பரிசோதனையை மேற்கொள்வது தற்போதைய நிலைமையின் கீழ் கடினமாகவுள்ளது. எவ்வாறாயினும் எரிபொருன் பிரச்சினை சாதாரண நிலைக்கு வந்தவுடன் எரிபொருள் பாவணை பரசோதனையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (இ) | 2018 பெப்ரவரி 05 திகதிய, 01/2018 ஆம் இலக்க வணிக மற்றும் முதலீட்டு கொள்கை சுற்றறிக்கையின் தொடர் இலக்கம் 1.12 | சலுகையடிப்படையில் மோடார் வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரம் விநியோகிக்கையில் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க உரிய | மாகாண வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தின் பணிப்பாளர் 9 ஆண்டு சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ளதாக ஆவண | வணிக மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்கள பணிப்பாளரின் ஆலோசனையை பெற்று அதன் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தகைமையை பூர்த்தி செய்துள்ள அலுவலர்களுக்கு மாத்திரம் மோடார் வாகன இறக்குமதி அனுமதிப்பத்தரம் விநியோகிக்க வேண்டிய போதும் மாகாண வீதி அபிவிருத்தி நிகழ்சித் திட்டத்தின் நிகழ்சி திட்ட பணிப்பாளரிற்கு மற்றும் உள்ளூராட்சி நிறுவன மேம்பாட்டு செயற்திட்ட பணிப்பாளரிற்கு அரச அபிவிருத்தி செயற்திதிட்டங்களில் 9 ஆண்டுகால சேவையை பூர்த்தி செய்யாது மோடார் வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. | பரிசோதனையின் போது உறுதி செய்யப்பட்டுள்ளது. 1/2018 சுற்றறிக்கையின் 1.1 மற்றும் 1.12 பிரகாரம் அனுமதிப் பத்திரமொன்றை பெற்றுக் கொள்ள தேவையான தகைமையை பூர்த்தி செய்துள்ளார். உள்ளூராட்சி நிறுவனங்களை மேம்படுத்தும் செயற்திதிட்ட பணிப்பாளர் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2018 பெப்ரவரி 05 திகதிய, 01/2018 ஆம் இலக்க வணிக மற்றும் முதலீட்டு கொள்கை சுற்றறிக்கையின் 9.2 பந்தி | சுற்றறிக்கையின் 9.2 பந்தி பிரகாரம் தகைமை பெறும் அலுவலர்களுக்கு மாத்திரம் மோடார் வாகன அனுமதிப் பத்திரம் விநியோகிப்பது ஒவ்வொறு செயலாளர்களினதும் பொறுப்பென குறிப்பிடப்பட்ட போதும் மேல் அவதானத்தின் பிரகாரம் செயலாளர் பொறுப்பை நிரைவேற்றும் விதத்தில் செயற்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | இலக்கம் 01/2013 மற்றும் 2013 ஆகஸ்ட் 02 கொண்ட வணிக மற்றும் முதலீட்டு கொள்கை சுற்றறிக்கையின் 01.02 (iv) | உள்ளூராட்சி நிறுவன மேம்பாட்டு செயற்திட்ட சிரேஷ்ட பொறியியலாளர் மற்றும் இணக்கப்பாட்டு அலுவலராக கடமையாற்றும் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வணிக மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்கள பணிப்பாளரின் ஆலோசனையை பெற்று அதன் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| | அலுவலரின் செயற்திட்ட சேவைக் காலம் பூர்த்தியாகி இருந்த போதும் இச் சுற்றறிக்கையின் 01.02(iv) பந்தி பிரகாரம் அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் ஒப்பந்த அடிப்படையில் இச் சுற்றறிக்கையில் குறிப்பிடும் தகைமையுள்ள பதவியொன்றிற்காக நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு சலுகை அடிப்படையில் மோடார் வாகன அனுமதிப்பத்திரம் உரித்தற்றது என ஆலோசனை வழங்கியிருக்கையில் மோடார் வாகன அனுமதிப் பத்தரமொன்று விநியோகிக்கப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

### (அ) நடமாடும் வியாபார அறைகளை கொள்வனவு செய்தல்

பொலன்னவை மாவட்டத்தில் உள்ளூராட்சி மட்டத்தில் விநியோகிக்க நடமாடும் 90 வியாபார அறைகளை கொள்வனவு செய்யவதற்காக தேசிய போட்டி விலைமனு கோரலின் கீழ் இரண்டு நிறுவனங்களிலிருந்து விலைமனு கிடைத்திருந்தது. குறைந்த விலை சமர்ப்பித்த தனியார் நிறுவனத்திலிருந்து இரண்டு வகை நடமாடும் வியாபார அறைகள் முறையே ரூபா 295,000 மற்றும் ரூபா 260,000 விகிதம் 90 வியாபார அறைகளுக்கு ரூபா 24,945,000 இற்கு கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கன் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | செயற்திட்டத்தை செயற்படுத்த முன்னர் கிரய நலன் பகுப்பாய்வொன்றை மேற்கொடுிருக்காததுடன் பயன்பாட்டாளர்களை தெரிவு செய்யும் முறைமையை தெளிவாக இனங்கண்டு ஆவணப்படுத்தி இருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | அமைச்சரவை ஆலோசனை பிரகாரம் புத்திஞானமாக அரச செலவுகளை முகாமைத்துவம் செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | செலவு விடய இலக்கம் 420-2-3-24-2202 உள்ளூராட்சி நிறுவனங்களை வலுவூட்டலின் கீழ் செலவுகளை மேற்கொள்வதற்கான செயற்திட்டத்தின் கீழ் உட்படாத நடமாடும் வியாபார அறைகளிற்காக செலவு மேற்கொள்ளல் 2-2021 உள்ளூராட்சி வழிகாட்டிகளின் மாற்றமாவதுடன் 2021 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 21/1596/304/134 கொண்ட அமைச்சரவை தீர்மானத்திற்கு மாற்றமாகும். அவரச மற்றும் முக்கிய சந்தர்பத்தின் மீது வழிகாட்டிகளிற்கு வெளியில் அவ்வாறான நிகழ்சித் திட்டங்களை அங்கீகரிக்கும் அதிகாரத்தின் மீது செயலாளர் செயற்திட்டத்தை அங்கீகரித்திருந்தார். பொலன்னருவை மாவட்ட மக்களின் அவசர மற்றும் முக்கிய தேவை நடமாடும் வியாபார அறைகளை பெற்றுக் கொள்வதல்ல என அவதானிக்கப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | அமைச்சரவை ஆலோசனை பிரகாரம் புத்திஞானமாக அரச செலவுகளை முகாமைத்துவம் செய்ய வேண்டும். |
| (iii) | செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு பொலன்னருவை மாவட்டத்தில் உள்ளூராட்சி ஆளுகை பிரதேசத்தை மாத்திரம் தெரிவு செய்ய தாக்கம் செலுத்தும் காரணம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | - மேற்படி - |

**(ஆ) ஈ உள்ளூராட்சி**

--------------------

| | | |
|---|---|---|
| முறையான பெறுகைகள் செயன்முறையொன்று இல்லாது பெறுகைகள் தீர்மானமொன்றை பெற்று நிதிப்பிரமாணம் 137(1),(2),(3),(4) மற்றும் 138 இன் ஏற்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தாது ஈ உள்ளூராட்சி கணனி முறைமையின் உதவி மற்றும் பராமரிப்பு சேவைகளுக்காக தனியார் நிறுவனமொன்றிற்கு 2018 ஆண்டில் ரூபா 9.6 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2019 ஆண்டு ஆரம்பத்திலும் அந் செயற்திட்டம் செயலிழந்து காணப்பட்டது. அவ்வாறென அமைச்சும் ஏற்றுக் கொண்டுள்ளதுடன் இதற்காக செலவிட்ட நிதி விளைவற்றதாக ஆகியிருந்தது. | eLG(1) நடைமுறைப்படுத்தும் போது ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வாக eLG(2) எனும் பெயரில் செயற்திட்டமொன்றை இலங்கை தகவல் மற்றும் தொலைதொடர்பு தொழிநுட்ப முகவர் நிறுவனத்துடன் இணைந்து செயற்படுத்தவுள்ளது. | செலவுகளை அங்கீகரிக்கும் மற்றும் உறுதி செய்கையில் ஏற்பட்டுள்ள கவனயீனம் தொடர்பாக முறையாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2014 பெப்ரவரி 17 திகதிய இலக்கம் 2014/01 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையின் 03 பந்தி பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டை செயற்படுத்துவதற்கென செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரிக்க வேண்டிய போதும், எதிர்பார்த்த விடயங்களை குறிப்பாக காட்டியிருக்கவில்லை. | செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரக்கும் போது அமைச்சின் ஒவ்வொறு பிரிவிற்கும் உரிய குறிப்பான நடவடிக்கைகள் மற்றும் சரவுசெலவுத் திட்ட மதிப்பீடு கவனத்தில் கொள்ளப்படும். அங்கு 2020.12.23 திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் 07/2020 இல் குறிப்பிடப்படும் ஆலோசனைகள் பின்பற்றப்பட்டுள்ளன. | மீளாய்வாண்டின் பின்னரான ஆண்டுகளின் திட்டங்களை வெற்றி பெறச்செய்து கொள்ள முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | பொலன்னருவை மாவட்டத்தில் கிராமிய இலத்திரனியல் நூலகத்தை இஸ்தாபிக்கும் செயற்திட்டம் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களிற்காக நடமாடும் வியாபார அறைகளை வழங்கும் செயற்திட்டம் போன்ற பாதீட்டு உத்சேத்தின் மூலம் இனங்கண்ட செயற்திட்டங்களை செயல் நடவடிக்கை திட்டத்திற்கு உட்படுத்தி திருதிய செயல் நடவடிக்கை திட்டமொன்றை சமர்ப்பித்திருக்கவில்லை. | திருத்திய செயல் நடவடிக்கை திட்டத்தை முறையாக தயாரிக்க முயற்சி எடுக்குமாறு குறித்த அலுவலர்கள் அறிவூட்டப்பட்டனர். | அரச கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 கடமைகள் நிறைவேற்றப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| அபிவிருத்தி பிரிவிற்குரியதாக மேற்கொள்ள எதிர்பார்த்த செயற்பாடுகளை குறிப்பாக செயல் நடவடிக்கை திட்டத்தில் காட்டப்படாத காரணத்தால் செயற்படுத்தியுள்ள செயற்திட்டங்களின் முன்னேற்றத்தை இனங்காண முடியவில்லை. | அபிவிருத்தி பிரிவிற்குரியதாக எதிர்பார்த்த செயற்பாடுகளை செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பாகக் காட்ட குறித்துக் கொண்டேன். | சரியான செயல் நடவடிக்கை திட்டமொன்றை போன்றே அதற்கு எதிராக முன்னேற்ற அறிக்கையொன்றை யும் தயாரிக்க வேண்டும். |

## 3.3 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடைந்து கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 09 சேதனப்பசளை இயந்திரங்களை கொள்வனவு செய்ய 2017 ஆண்டில் ரூபா 935.69 மில்லியன் செலவிட்டிருந்ததுடன் அவ்வியந்திரங்களை பொருத்துவதற்காக கட்டிடங்களை நிர்மாணிக்க கடந்த ஆண்டுகளில் ரூபா 631.23 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் காலி மாநகர சபைக்காக பொருத்திய இயந்திரம் 2022 ஜுலை 31 திகதி வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தை முறையாக 2022.02.24 திகதி காலி மாநகர சபையிற்கு ஒப்படைத்துள்ளதுடன் செயற்திட்டத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை விரைவில் ஆரம்பிக்குமாறு அந்நகர சபையிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இச்செயற்திட்ட தளத்திற்கு காலி மாநகர சபையினால் தினந்தோறும் குப்பை வெளியிடுவதால் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்க பாதிப்பு ஏற்பட்டள்ளதாக அவதானிக்கிறேன். | உடன்பட்ட காலப் பகுதியினுள் நிர்மாணங்களை பூர்த்தி செய்து கொள்ள முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

## 3.4 எதிர்பார்த்த நலன்களை (Outcome) அடைந்து கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆண்டு கொள்வனவு செய்த சேதனப் பசளை இயந்திரங்களில் கேகாலை, ஹம்பத்தொட்ட மற்றும் காத்தாண்குடி போன்ற நகர சபைகள் மற்றும் லங்காபுற, வடமாராச்சி மற்றும் அட்டாலச்சேனை பிரதேச சபையின் கீழ் பொருத்தியுள்ள இயந்திரங்களிற்கு தினந்தோறும் கிடைக்கும் கழிவுப் பொருட்களின் அளவு எதிர்பார்த்த கழிவு அளவின் 10 சதவீதத்திலும் குறைந்த அளவில் காணப்பட்டதால் நாளாந்த உற்பத்தி 10 சதவீதத்திலும் குறைந்தது. அதன் பிரகாரம் எதிர்பார்த்த நலன்கள் இழக்கப்பட்டதால் ஈடுபடுத்திய நிதிக்கு ஒப்பாக விளைவற்ற செயற்திட்டமொன்றாக அவதானிக்கப்பட்டது. | நாட்டில் நிலவிய நிலைமை இதற்கு காரணமாக அமைந்துள்ளதுடன் கொவிட் 19 நிலைமை காரணமாக உக்கலடையும் கழிவுகள் வீடுகளினுள்ளேயே சேதனப் பசளையாக்கல் அதிகரித்துள்ளது. அனைத்து நிலைமைகளும் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டிருந்தால் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்து கொள்ள முடியும் | அமைச்சரவைக்கு சரியல்லாத தகவல்களை முன்வைத்து இயந்திரங்களை கொள்வனவு செய்ய தீர்மானம் எடுத்த தரப்பினர் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தபுள்ள மாநகர சபையில் பொருத்தியுள்ள சேதனப்பசளை இயந்திரத்தின் உச்ச கொள்ளளவிற்கு அன்மித்துள்ளதாக அறிக்கையிட்டுள்ள போதும் அவ்வியந்திரத்தின் மாதாந்த சாதாரண **விற்பனை வருமானம்** ரூபா 4 இலட்சமானது இவ்வியந்திரம் ஒன்றிலிருந்து ஆண்டிற்கு **எதிர்பார்த்த இலாபம்** ரூபா 80 மில்லியன் ஆகையால் எதிர்பார்த்த நிதி இலக்குகளை அமைந்து கொள்ள முடியாதுள்ளதாக கணக்காய்வின் போது உறுதியானது. | கட்டுப்படுத்த முடியாத காரணிகள் ஏற்பட்டதால் எதிர்பார்த்த பசளை தொகையொன்றை பெற்றுக் கொள்ள முடியாது போனதால் ரூபா 80 மில்லியன் நிதி முன்னேற்றத்தை அடைந்து கொள்ளவது இச்சந்தர்பத்தில் கடினமான போதும், ஒழுங்காக உள்ளூராட்சி நிறுவனங்களை மீண்டும் அறிவூட்டி கழிவுகளை பெற்றுக் கொள்ளலை முறையாக்கி எதிர்பார்த்த வெளியீட்டை அடைந்து கொள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் அறிவூட்டப்பட்டுள்ளன. | - மேற்படி - |

## 3.5 நிகழ்சித் திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| பெலிஅத்த நகர வசதிகள் மத்திய நிலையத்தை நிர்மாணிக்க முற்பணமாக 2013 ஆண்டு இலங்கை காணி நிரப்பல் மற்றும் அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 68 மில்லியன் செலுத்தியிருந்த போதும் எவ்வித நிர்மாணமும் மேற்கொள்ளப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | 2014 ஆண்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் மீது 2014 ஆண்டின் பின்னர் ஏற்பாடு கிடைக்காததன் காரணமாக செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாவிடினும் கூட்டுத்தாபனம் மேற்கொண்ட பணிகளிற்காக ரூபா 1.1 மில்லியன் ஆன பட்டியல் கட்டிட திணைக்களத்தால் உறுதிப்படுத்தப்படவில்லை. எஞ்சிய தொகையான ரூபா 66.8 மில்லியன் மேலும் அறவிட வேண்டியதாக உள்ளது. கிராமிய பாலம் செயற்திட்டத்திற்கு தேவையான களஞ்சியத்திற்காக கூட்டுத்தாபனத்திலிருந்து வாடகை அடிப்படையில் பெற்றுள்ள ரூபா 25.95 மில்லியனை பதிலீடு செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | பொறுப்புவாய்ந்த அலுவலர்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.6 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| **(அ) பொதுக் கல்வி நவீனமாக்கும் செயற்திட்டம் (GEM)** | | |
| ஆலோசகர்களை சேவையில் ஈடுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டிக் கோவையின் 2.5(i), 4.3 மற்றும் 4.4 பந்திகளில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளிற்கு முரணாக தெரிவு செய்த ஆலோகர்களுக்காக 2021 ஆண்டில் ரூபா 8,110,000 ஆன சம்பளம் செலுத்தப்பட்டிருந்ததுடன், ஆட்சேர்த்த ஆலோசகர்களிடமிருந்து செயற்திட்டம் தொடர்பாக போதிய சேவையொன்று இடம்பெற்றதாக கணக்காய்வின் போது உறுதியாகவில்லை. | ஆலோசகர்களை ஆட்சேர்க்கும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு மாற்றமாக செயற்படவில்லை என அறவிக்க விரும்புகிறேன். முக்கிய சந்தர்ங்களில் இவ் அலுவலர்களிற்கு செலுத்திய பணத்திற்கு ஒப்பாக பாரிய சேவையொன்றை பெற்றுக் கொண்டதாக குறிப்பிடுகிறேன். | தேவையின்றி நடாத்திச் செல்லும் பதவிகளை ஒழித்து அரச செலவுகளை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ) பிரதேச அபிவிருத்தி உதவி செயற்திட்டம் (LDSP)** | | |
| i. செயற்திட்ட மூன்றாம் கணக்காண்டான 2021 ஆண்டிற்காக வருடாந்த மதிப்பீட்டிலிருந்து ரூபா 2739.9 மில்லியன் ஒதுக்கியிருந்த போதும் ஆண்டிற்குரிய செலவு ரூபா 718.01 மில்லியன் மாத்திரம் ஆனதில் ஆண்டினுள் 26.2 சதவீத மிகக் குறைந்த அளவான நிதி முன்னேற்மொன்றை அடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டது. | நாட்டில் நிலவிய சீரற்ற நிலைமை மற்றும் சந்தையில் காணப்பட்ட இறக்குமதிகளின் விலை வித்தியாசங்கள் காரணமாக ஒப்பந்ததாரர்களிற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தங்களை உரிய காலஎல்லையில் பூர்த்தி செய்யாததன் காரணத்தால் திட்டமிட்டவாறு முன்னேற்றத்தை அடைந்து கொள்ள முடியவில்லை. | செயற்திட்டத்தை உரிய காலத்தில் பூர்த்தி செய்ய நடிக்கை எடுக்க வேண்டும். |
| ii. இந்த செயற்திட்டத்தின் ஆரம்ப பணிகளிற்காக நியமிக்கப்பட்ட 4 ஆலோசகர்களினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை பூர்த்தி செய்யாததால் செலுத்திய ரூபா 6.47 மில்லியன் நிதியொன்று விளைவற்ற செலவொன்றாகி இருந்தமை அவதானிக்கப்பட்டது. | செயற்திட்ட ஆரம்ப கட்டத்தில் ஆட்சேர்கப்படட் ஆலோசகர்கள் வழங்கிய அறிக்கைகள் மற்றும் தற்போது அவர்களால் வழங்கப்படும் தகவல்கள் மற்றும் அறிக்கைகளை செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக தற்போது தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுவதுடன், | அரசிற்கு நட்டமொன்று ஏற்படாதவாறு, செலுத்திய தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | குறித்த ஆலோசகர்கள் தொடர்பான விஷேட குழுவொன்றை நியமித்து அவர்களால் மேற்கொள்ளப்பட்ட கடமைகளை மதிப்பீட்டிற்கு உற்படுத்தி அதன் அறிக்கை தற்போது கணக்காய்விற்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) **உத்தேச நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் ஆரம்ப வசதிகளை வழங்கும் செயற்திட்டம் (UPPF)** | | |
| i. நிகழ்நிலையாக இடம்பெற்ற இரண்டாம் நகர நிலைபேறான அபிவிருத்தி செயற்திட்டத்தின் அப்பட்டியலிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. அதன் காரணமாக முடிவுறுத்தப்பட்ட அந் செயற்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கைகளிற்காக செயற்படுத்திய நகர செயற்திட்டத்தின் வசதிகளை வழங்கும் செயற்திட்டத்தின் மீண்டும் ஆரம்பிக்க அமைச்சரவை தீர்மானித்திருந்தது. செயற்திட்டத்தின் முடிவுறுத்திய காரணத்தால் அரசிற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 169.06 மில்லியனான நிதியை நட்டமொன்றாகாதவாறு பயனுள்ள செலவொன்றாக ஆக்கிக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அரசினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானமொன்றின் மீது செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை முடிவுறுத்திய போதும் மதியுரை நிறுவனத்தினூடாக பெற்றுக் கொண்ட சேவைக்காக கால அடிப்படையில் (Timebase) கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. அரசிற்கு உச்ச பொருளாதார நலன் கிடைக்கும் வகையில் குறைந்த கிரயத்தில் மதியுரை நிறுவனத்தின் சேவையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்த காரணத்தால் செலவுகளை குறைத்துக் கொண்டு அரசிற்கு உச்ச பொருளாதார நலன்களை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அரசிற்கு நட்டமொன்று ஏற்படாதவாறு செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதுடன் நட்டமொன்று ஏற்பட்டிருப்பின் அதனை பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிட வேண்டும். |
| ii. செயற்திட்டத்தின் பணிப்பாளரிற்கு சம்பளம் வழங்குகையில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் இலக்கம் 01/2019 மற்றும் 2019 மார்ச் 05 திகதிய சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் இஸ்தாபிக்க வேண்டிய சம்பள மட்டத்தில் இஸ்தாபிக்காது மாதம் ரூபா 60,000 கூடுதலாக 16 | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் 2022.02.07 திகதி வழங்கியுள்ள பரிந்துரையை மாற்றிக் கொள்ள எனது இலக்கம் PL/16/06/21 மற்றும் 2022.06.20 திகதிய கடிதத்தை திறைசேரி செயலாளரிற்கு | மேலதிக கொடுப்னவை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| மாதங்களுக்கு ரூபா 960,000 இனை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | சமர்பித்துள்ளதாக அறிவிக்கிறேன். | |
| iii. முகாமைத்துவ சேவைகள் திணைக்கள இலக்கம் 01/2019 மற்றும் 2019 மார்ச் 05 திகதிய சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு மாற்றமாக புறஎழுச்சி செயற்திட்டத்தின் நிதிப் பகுப்பாய்வாளர் இச்செயற்திட்ட கணக்காளராக கடமை புறியும் அடிப்படையில் நியமித்து சம்பளமாக ரூபா 720,000 செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு சட்ட விதி பிரமாணங்களுக்கு மாற்றமாக செலுத்திய சம்பளத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | தவறான கொடுப்பனவை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) **உள்ளூராட்சி நிறுவன மேம்பாட்டு பிரிவு ரீதயான செயற்திட்டம் (புற எழுச்சி) – மேலதி ஏற்பாடு (LGESP - AF)** | | |
| 2016 நவம்பர் 02 திகதி இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி கைச்சாத்திட்ட இலக்கம் 3431-SRI(SF) கொண்ட கடன் ஒப்பந்தம் பிரகாரம் இச்செயற்திட்டத்தை 2019 திசெம்பர் 31 திகதி பூர்த்தி செய்ய வேண்டி இருந்தது. செயற்திட்ட முகாமைத்துவ செயற்பாட்டு வழிகாட்டிகள் பிரகாரம் முதல் 18 மாதங்களில் நிர்மாண ஒப்பந்தங்களை வழங்க மற்றும் வழங்கிய ஒப்பந்தங்களை அதன் உடன்படிக்கை பிரகாரம் உரிய காலத்தினுள் வேலைகளை பூர்த்தி செய்துகொள்ள முடியாததால் 2023 மார்ச் 31 திகதி வரை செயற்திட்ட காலம் நீடிக்கப்பட்டிருந்தது.<br>கால நீடிப்பு காரணமாக மதியுரை நிறுவனம் மற்றும் செயற்திட்ட ஆளணியை பராமரித்தல் உள்ளிட்ட செயற்திட்ட இயக்க செலவுகளிற்காக மாதம் ரூபா 80 மில்லியன் வீதம் ரூபா 3,120 மில்லியன் மேலதிக செலவொன்றை அரசிற்கு மேற்கொள்ள ஏற்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | தேவையான நித ஏற்பாடு கிடைக்காமை, கோவிட் தொற்றின் தாக்கம் மற்றும் அரசினால் விதித்த இறக்குமதி மட்டுப்பாடுகள் காரணமாக நிர்மாண பொருட்களை பெற்றுக் கொள்ள இயலாது போனமை, செயற்திட்ட காலத்தை நீடிக்க காரணமானது. | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் செயற்திட்ட அலுவலகத்தை முடிவிட்டு அமைச்சு மற்றும் மாகாண சபைகளின் சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களின் பங்களிப்புடன் செயற்திட்டத்தை செயற்படுத்தி பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(உ) **எழுச்சி பெறும வலயங்களில் கிராம உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்திட்டம் (RIDEP)**

---------------------------------------------

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மற்றும் ஜப்பான் சர்வதேச உதவி முகவர் நிறுவனத்தினால் 2017 ஜுலை 17 திகதி கைசாத்திட்ட கடன் உடன்படிக்கை பிரகாரம் இந் செயற்திட்டத்தின் கீழ் 4 மாகாணங்களில் குடிநீர், வடிகால், கிராமிய பாதைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்ய ஜப்பான் யென் 12,957 மில்லியன் ஜப்பான் யென்கள் நிதியை வழங்கவுள்ளது. செயற்திட்ட முகாமைத்துவ செயற்பாட்டு வழிகாட்டி பிரகாரம் துணை செயற்திட்டங்களில் அனைத்து நிர்மாணங்களையும் 2021 செப்டம்பர் அளவில் பூர்த்தி செய்து செயற்திட்ட செயற்பாடுகளை முடிவுருத்த வேண்டும். செயற்திட்ட செயற்பாட்டு வழிகாட்டி பிரகாரம் 418 துணை செயற்திட்டங்களை பூர்த்தி செய்ய வேண்டிய போதும் 355 துணை செயற்திட்டங்கள் மாத்திரமே செயற்படுத்த தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றிலும் 232 துணை செயற்திட்டங்கள் எவ்வித முன்னேற்றத்தையும் அடைந்திருக்கவில்லை. இந் செயற்திட்டத்தின் திட்டம் தயாரித்தல் மற்றும் நிர்மாண மேற்பார்வைக்காக இரண்டு மதியுரை நிறுவனங்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந் நிறுவனங்களிலிருந்து எதிர்பார்த்த முன்னேற்றத்தை அடைந்து கொள்ள இயலாதிருந்தது. செயற்திட்ட முகாமைத்துவ செயற்பாட்டு வழிகாட்டி பிரகாரம் 2021 ஆண்டு முடிவில் பயன்படுத்த வேண்டிய நிதி 12,492 மில்லியன் ஜப்பான் யென் ஆனபோதும் பயன்படுத்திய நிதி ஜப்பான் யென் 643.33 மில்லியன் ஆனதில், 7.39 சதவீத முன்னேற்றத்தை மாத்திரம் அடைந்துள்ளதாகவும் அதன் பிரகாரம் செயற்திட்ட் மிகப் பலவீனமான செயற்பாட்டு மட்டத்தில் இருப்பதாக அவதானிக்கப்பட்டது.

செயற்திட்ட செயற்பாட்டு வழிகாட்டி மற்றும் கடன் உடன்படிக்கை பிரகாரம் செயற்திட்ட காலம் 07 வருடங்களாகும். கடன் ஒப்பந்தம் 2017.07.07 திகதி கையொப்பமிடப்பட்டதுடன், அதன் பிரகாரம் செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய வேண்டி ஏற்படுவது அதற்கு 07 வருடங்களின் பின்னராகும் அதாவது 2024.07.07 திகதியில். செயற்திட்டத்திற்காக நியமித்த 02 மதியுரை நிறுவனங்கள், முறையே 2019 ஜுலை மற்றும் 2019 செப்டம்பர் மாதங்களில் பணிகளை ஆரம்பித்துள்ளன. அதன் பிரகாரம் 48 மாதங்களின் பின்னர் அதாவது 2023 ஜுலை மாதம் குடிநீர் செயற்திட்டம் மற்றும் 2023 செப்டம்பர் மாதம் பாதைகள் மற்றும் கால்வாய் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்

எதிர்பார்த்த செயலாற்றுகை மட்டத்தை அடைந்து கொள்ள வழிகளை செய்ய வேண்டும்.

(ஊ) **மாகாண பாதை அபிவிருத்தி செயற்திட்டம் (PRDP)**

---

| | | |
|---|---|---|
| உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்துடன் இலங்கை அரசாங்கம் 2017 செப்டம்பர் 29 திகதி உடன்பட்ட இலக்கம் 5788-LK கொண்ட கடன் ஒப்பந்தத்தில் நோக்கத்தை மாற்றி மறுசீர்ரமைத்தன் பின்னர் அந் செயற்திட்டத்தின் மாகாண பாதைகள் அபிவிருத்தியின் கீழ் 09 மாகாணங்களில பிரதேச பாதைகளை நிர்மாணித்தல் மற்றும் அபிவிருத்தி செய்ய 109 மில்லியன் ஐ.அ.கு. டொலர் கடன் தொகையொன்று வழங்கப்படவுள்ளது. செயற்திட்ட முகாமைத்துவ செயற்பாட்டு வழிகாட்டி பிரகாரம் அவ்வனைத்து நிர்மாணங்களையும் 2023 மார்ச் அளவில் பூர்த்தி செய்ய வேண்டும். நிகழ்சித் திட்ட செயற்பாட்டு வழிகாட்டி பிரகாரம் கட்டம் ii படி ii கீழான பாதைகளை பெகேஜின் பெறுகைகள் செயற்பாடுகள் 2019 திசெம்பர் 31 திகதியளவில் பூர்த்தி செய்ய வேண்டிய போதும் 2021 திசெம்பர் 31 திகதி வரையும் அவ்வாறான முன்னேற்றமொன்றை அடைந்து கொள்ள முடியாதிருந்ததுடன் கட்டம் i கீழ் வழங்கப்பட்ட பாதை பெகேஜின் முன்னேற்றமும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது. | சிவில் வேலைகளுக்காக ஒதுக்கிய 70 மில்லியன் டொலர்களில் கனிசமான மீதயொன்று இல்லாததால் அடுத்த பெகேஜ் யை செயற்படுத்த உலக வங்கி அங்கீகாரம் வழங்கவில்லை. அதன் பிரகாரம் அப் பெகேஜ்களின் மொத்த பௌதீக ரீதியான முன்னேற்றம் 55% அடையப்பட்டுள்ளதுடன் (எதிர்பார்த்த இலக்கு ரீதியான முன்னேற்றம் 60%) 40% ஆன நிதி முன்னேற்றம் காட்டப்படுகின்றது. | உரிய காலத்தில் செயற்திட்டத்தின் எதிர்பார்த்த செயலாற்றுகை மட்டத்தை பேணிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(எ) **கிராமிய பாலங்கள் செயற்திட்டம்**

---

| | | |
|---|---|---|
| i. ஐக்கிய இராட்சியம், நெதர்லாந்து போன்ற நாடுகளின் தனியார் வங்கிகளிலிருந்து அந் நாடுகளில் ஏற்றுமதியை அபிவிருத்தி செய்யும் கடனாக வழங்கியுள்ள கடன் நிதியை பயன்படுத்தி நிர்மாணிக்கும் பாலத்திற்காக இடத்தை தெரிவு செய்வது தொடர்பாக ஒழுங்கான முறைமையொன்று காணப்படாததுடன் செயற்திட்ட ஆளணியொன்று காணப்பட்ட போதும் ஒன்றிணைக்கப்பட்ட பாரிய அளவில் ஒப்பந்தங்கள் (Turn Key) செயற்திட்டமாக செயற்படும் இச்செயற்திட்டம் தொடர்பாக | புதிய பால இடத்தை தெரிவு செய்கையில் தெளிவான முறைமையொன்று பின்பற்றப்படுகின்றது. அம் முறைமையின் ஆரம்ப முயற்சியாக புதிய பாள இடங்கை தெரிவு செய்யும் அளவுகோள்கள் மற்றும் சாத்தியப்பாட்டு ஆய்வின் உதவியுடன் இணைந்த இட பரிசோதனையொன்றின் மூலம் இட சாத்தியப்பாட்டை ஆய்விற்கு உட்படுத்தப்படுகிறது. | முகாமைத்துவத்தின் தெளிவுபடுத்தலை நடைமுறைப்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| போதிய பங்களிப்பொன்று கிடைத்திருக்கவில்லை. | | |
| ii. ஒப்பந்த பிரகாரம் பாலங்களை பொருத்தும் இடங்களை இனங்காண முறையான பொறிமுறையொன்றை செயற்படுத்தி இருக்காததுடன் பாலங்களை இஸ்தாபிக்க வேண்டிய இடங்களை தீர்மானிக்கும் போது பாளமொன்றிற்காக கிரயம் மற்றும் அப்பாளத்தால் பயன்பெறும் எண்ணிக்கை மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய விருத்தியை கவனித்து போதிய கிரய நலன்கள் ஆராய்சியின் பின்னர் இடங்களை தெரிவு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே 100 ஆண்களிற்கு அதிக காலம் நீடிக்கும் எதிர்பார்ப்பில் பொருத்திய போதும் பாலத்தின் கொன்கிரீட் நிர்மாணம் தொடர்பாக எவ்வித தரகட்டுப்பாட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பாலங்களின் பௌதீக ரீதியான நிர்மாணத்திற்கு பயன்படுத்தும் கொன்கிரீட்களின் தகைமை உறுதிப்படுத்தல் BS 1881 – 116 தரத்திற்கு முற்றிணங்களாக செய்யப்படுகிறது. | கொன்கிரீட் நிர்மாணங்கள் தொடர்பாக தகைமை பரிசோதனை செயற்பாடொன்றை பின்பற்ற வேண்டும். |
| iii. உருக்கு பாளமொன்றின் தேவைப்பாடின்றி முதலீடு செய்யப்பட்ட நிதிக்கு ஒப்பாக நலனொன்று கிடைக்காதவாறு மதகு நிர்மாணிக்க வேண்டிய இடங்களில் பாரிய அளவில் பாலம் நிர்மாணிக்கப்பட்டுள்ள சந்தர்பங்கள் மாதிரி பரிசோசனையின் போது அவதானிக்கப்பட்டன. | பாலம் நிர்மாணிக்க வேண்டிய சில இடங்களில் பல காரணங்களினால் பாலத்திற்கு பதிலாக சிறிய மதகு அல்லது சிறிய பாலத்தை நிர்மாணித்திருக்க முடியும். பெறிய பாளமொன்று நிர்மாணிக்க வேண்டிய இடங்களில் நிர்மாணித்துள்ள போதியளவில்லாத மதகு அல்லது சிறிய பாலம் அகற்றப்பட்டு அதற்கு பதிலாக உரிய நீளத்துடனான பாலம் இந்த செயற்திட்டத்தின் கீழ் அவ்வாறான இடங்களில் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அவ்விடங்களில் ஏற்படக்கூடிய வெள்ள நிலைமை அல்லது பாதுகாப்பற்ற நிலைமைகள் தவிர்க்கப்பட்டுள்ளன. | முதலீடு செய்யப்படும் நிதிக்கு ஒப்பாக பொருளாதார மற்றும் சமூக நலன்கள் தொடர்பாக ஆய்வு செய்து தேவைப்பாட்டின் மீது இடங்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். |

**(ஏ) பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவத்தை மேன்படுத்தும் முதலீட்டு வேலைத் திட்டம் - கடன் இலக்கம் 3348/3349 – 2021**

--------------------------------------------------------------

| | | |
|---|---|---|
| i. ரூபா 4,360,779,986 பெறுமதிக்கு நிர்மாணிக்க உத்தேச வெள்ளவத்த கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய நிர்மாண நடவடிக்கைகள் 2017 ஜுன் 21 திகதி ஆரம்பித்து 2019 திசெம்பர் 14 திகதி வேலைகள் பூர்த்தி செய்ய திட்டமிட்டிருந்த போதும் 2021 திசெம்பர் 31 திகதியன்றும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்குகிறேன். | கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய நிர்மாணம் தோல்வியடைதல் மீது மொத்த கழிவுநீர் தொகுதியும் தோல்வியடையும் பாரிய அபாயமொன்று காணப்படுவதால் பிரச்சினைகளை விரைவில் தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| ii. கிருள – நாரஹேன்பிட்ட பிரதேசத்தில் கழவுநீர் வசதி வழங்கும் செயற்திட்டத்தை 2017 ஒக்டோபர் 23 திகதி ஒப்பந்தத்தை வழங்கி 2020 ஏப்ரல் 10 திகதி பூர்த்தி செய்ய திட்டமிட்டிருந்த போதும் 2022 ஜனவரி 31 திகதயளவிலும் ஒப்பந்தத்தை வழங்கியிருக்கவில்லை. மேலும் 2021 திசெம்பர் 31 திகதியளவில் மீள் குடியேற்றம் மற்றும் காணிகளை சுவீகரிக்க ரூபா 184,170,150 ஆன தொகையொன்று செலுத்தப்பட்டு இருந்ததாக அவதானிக்கப்பட்டது. | காணி சுவீகரிக்கும் தாமதம் மற்றும் திட்டமிடல் அவ்வப் போது மாறியதன் மீது இந்த காலதாமதம் ஏற்பட்டிருந்தது. | செயற் திட்டத்தை துரிதமாக பூர்த்தி செய்ய துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| iii. Provision of New Gravity Sewers, Force Mains and Construction of pump ststions for Kirulapone catchment area<br>இச் செயற்திட்டத்தை 2017 மே 18 திகதி ஆரம்பித்து 2020 மே 14 திததி பூர்த்தி செய்ய திட்டமிட்டிருந்த போதும் 2022 ஜுலை 30 திகதி வரை கால நீடிப்பு செய்யப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 திகதியன்று நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் முறையே 63 சதவீதம் மற்றும் 53 சதவீதமானது. உந்தி மத்திய நிலையத்தை நிர்மாணிப்பதற்கான உத்தேச காணியை ஒப்பந்ததாரருக்கு வழங்க தாமதித்ததன் மீது ஒப்பந்ததாரருக்கு மேற்கொள்ள | காணியை ஒப்படைக்க தாமதித்தமை மற்றும் ஒப்பந்ததாரரின் பலவீன முகாமைத்துவம் காரணமாக தாமதம் ஏற்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை துரிதப்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஏற்படும் மேலதி கிரயத்தின் மீது ஒப்பந்ததாரர் ரூபா 3,071,262,126 ஆன உரிமை கோரலொன்றை செய்திருந்தார். ரூபா 717,054,675 ஆன ஒப்பந்த கிரயத்திற்காக இவ் உரிமை கோரல் செய்யப்பட்டிருந்ததுடன் இதனை பிரச்சினை குழுவின் மூலம் தீர்த்துக் கொள்ள இயலாததன் மீது தீர்ப்பிற்காக சமர்பிக்கப்பட்டுள்ளது. | | |
| iv. 2021 ஆண்டில் கொள்கை உதவிக் குழுக்கூடட்ம் 1 மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன் 2010 ஆண்டு முதல் 2021 திசெம்பர் 31 திகதி வரை கொள்கை உதவிக் குழுவிற்காக ரூபா 41,236,786 ஆன தொகையொன்று படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. மொத்த கழிவுநீர் கருத்திட்டமும் தாமதமாக அசையும் செயற்திட்டமொன்றாக மாறியிருந்தமையும், செயற்திட்டத்தை பூர்த்தி செய்து கொள்ள இயலாத பாரிய அபாயமொன்று ஏற்பட்டுள்ளதன் மீது கொள்கை உதவிக் குழுக்களினால் பயனுள்ள கடமைபொறுப்பொன்று இடம்பெற்றதா என கணக்காய்வின் போது உறுதி செய்து கொள்ள முடியவில்லை. | செயற்திட்ட ஊழியர்கள் எனக் கருதி படிகள் செலுத்தப்பட்டுள்ளன. | செயற்திட்ட நோக்கத்தை அடைந்து கொள்ள நேரடியாக பயங்களிக்க வேண்டியதுடன் அலுவலர்களின் செயல் நடவடிக்கையை மதிப்பிட வேலைத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டும். |
| **(ஐ) பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவத்தை மேன்படுத்தும் முதலீட்டு வேலைத் திட்டம் - கடன் இலக்கம் 3030 – 2021**<br>------------------------------------------------------------ | | |
| i. கடன் உடன்படிக்கை பிரகாரம் 2014 ஜுன் 03 ஆரம்பித்து 2019 ஜுன் 30 திகதி பூர்த்தி செய்ய வேண்டிய போதும் திட்டமிட்ட செயல்களை உரிய கால எல்லையினுள் பூர்த்தி செய்ய முடியாததன் மீது 2022 ஒக்டோபர் 24 வரை காலநீடிப்பு செய்யப்பட்டிருந்தது. | அவதானத்துடன் இணங்குகிறேன். | செயற்திட்ட நோக்கம் மற்றும் எதிர்பார்த்த நலன்களை பெற்றுக் கொள்ள துரிதமாக வேலைகளை பூர்த்தி செய்ய செயற்பட வேண்டும். |
| ii. மாதம்பிடிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய நிர்மாணம், சாக்கடை செய்யாத 07 பிரதேசங்களுக்கு | வெளிநாட்டு கடன் உதவியை பெற்றுக் கொள்ளும் வரை | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| மலசலகழிவு வசதிகளை வழங்கும் செயற்திட்டம், காணப்படும் 05 சிறிய உந்தி நிலையங்களை நிர்மாணிக்கும் செயற்திட்டம், மாளிகாவத்த உந்தி நிலையத்திலிருந்து மாதம்பிடிய உந்தி நிலையம் வரையான பேஸ்லய்ன் மலசலகழிவு பாதை, வடக்கு கழிவுநீர் ஒன்றுசேரும் பிரதேசத்தில் மலசலகழிவுகள் மேன்படுத்தல் எனும் துணை செயற்திட்டங்களுக்கு உரியதாக மதியுரை ஒப்பந்தம் போதிய நிதியம் இல்லாததன் மீது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. | இச்செயற்பாடுகளை தாமதிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. | |
| iii. கி.மீ 92.5 ஆன மலசலகழிவு குழாய்களின் மதிப்பீடு மற்றும் அவசர திருத்த ஒப்பந்தத்திற்காக 2016 ஆண்டு பெறுகைகள் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் ஒப்பந்தம் 2021 ஒக்டோபர் மாதம் ஒப்படைக்கப்பட்டு இருந்தது. அதன் பிரகாரம் மணுதாரர்களை தெரிவு செய்ய 5 ஆண்டுகளிற்கு அதிக காலமொன்று கடந்திருந்தது. 2021 திசெம்பர் 31 திகதியளவில் ஒப்பந்தத்தின் பௌதீக முன்னேற்றம் 1 சதவீதம் மாத்திரமானதுடன் 2022 ஒக்டோபர் 24 திகதி கடன் ஒப்பந்தத்தின் மற்றும் மதியுரை ஒப்பந்தத்தின் காலம முடிவடைவதால் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்து கொள்ள முடியாத கடும் அபாயமொன்று காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டங்களிற்குரிய பெறுகைகள் நடவடிக்கைகளுக்கு செலவாகும் காலம் அதகரிப்பதை தவிர்க்க முடியாத விடயமாகும். | - மேற்படி - |
| **(ஓ) பாரிய கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டம். கடன் ஒப்பந்த இலக்கம் 2557/2558 – 2021** | | |
| i. நீர் உந்திநிலைய செயற்திட்டத்தை 2010 ஏப்ரல் 09 திகதி ஆரம்பித்து 2015 ஜுன் 30 பூர்த்தி செய்ய வேண்டிய போதும் வேலைகளை பூர்த்தி செய்யும் திகதி 2022 திசெம்பர் 31 திகதி வரை 4 சந்தப்பங்களில் கால நீடிப்பு செய்யப்பட்டிருந்தன. 2022 | தவிர்க்க முடியாத விடயங்களால் செயற்திட்டம் தாமதித்துள்ளது. | செயற்திட்ட காலம் பூர்த்தியாக முன்னர் பூர்த்தி செய்ய உடனடி தீர்மானம் எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மார்ச் 31 திகதியன்றும் மாலிகாவத்த, பொரல்ல, விட்ஸ்வைக் மற்றும் திபிரிகஸயாய எனும் கழிவுநீர் உந்திநிலையங்களின் பௌதீக முன்னேற்றம் முறையே 76, 64, 71 மற்றும் 74 சதவீதமானது. அவ்வாறே வனாத்தமுள்ள மற்றும் விட்ஸ்வைக் ஆகிய Pumping Mains களின் 2022 மார்ச் 31 திகதியன்று பௌதீக முன்னேற்றம் 61 சதவீத மட்டத்தில் காணப்பட்டது. இதன் பிரகாரம் கழவுநீர் உந்திநிலைய செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய முடியாத கடும் அபாயமொன்று காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | | |
| ii. | மாலிகாவத்த உந்தி மத்தியநிலையம் தொடர்பாக காணப்படுகின்ற தீர்வு நடவடிக்கைக்காக மூன்று நிபுணர்களை 2021 ஏப்ரல் 09 திகதி நியமித்து 2021 திசெம்பர் 31 திகதி வரையும் அவ்வலுவளர்கள் மூவருக்கும் கூட்டுத்தொகை ரூபா 1,736,128 ஆன தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. எனினும் இவ்வலுவளர்களை நியமிக்க மற்றும் அவர்களுக்கு படிகளை வழங்குவது தொடர்பான அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | அவதானத்துடன் இணங்குகிறேன். | செயற்திட்ட நோக்கங்களுக்கு மாற்றமான செலவுகளை குறைத்துக் கொள்ள செயற்படல். |

**3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலக்கம் PF-5910 மற்றும் PE-8364 கொண்ட வாகனங்கள் 2018 ஒக்டோபர் 17 ஆம் திகதி அப்போதைய பிரதி அமைச்சரினால் திறன் விருத்தி அமைச்சிற்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்ததுடன் அவ்வாகனங்களை சுவீகரிக்க அல்லது மீண்டும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இலக்கம் 252 – 6707 கொண்ட கெப் வண்டியை தங்கள்ள பிரதேச | PF-5910 மற்றும் PE-8364 இனை இவ்வமைச்சிற்கு பெற்றுத்தருமாறு திறன் விருத்தி அமைச்சிற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுளளது. KE-4249 இனை சமூக நலன்புரி மற்றும் முதன்மை கைத்தொழில் பெயரில் தற்போது அமைச்சொன்று இல்லாததால் அவ்வாகனம் | மீள்பெற்றுக் கொள்ளல் அல்லது ஒப்படைத்தல் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சபைக்கு வழங்கியுள்ள போதும் ஒப்படைக்க இது வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br><br>இலக்கம் KE-4249 கொண்ட வாகனத்தை 2018 ஜுன் 21 ஆம் திகதி சமூக நலன்புரி மற்றும் முதன்மை கைத்தொழில் அமைச்சிற்கு ஒப்படைத்திருந்த போதும் மீண்டும் பெற்றுக் கொள்ள அல்லது சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவிலலை.<br><br>அமைச்சிற்கு சொந்மான இலக்கம் KA-0127 கொண்ட கெப் வண்டி, இலக்கம் 17-5496 மோடார் வண்டி மற்றும் இலக்கம் WK-1941 மற்றும் WK-1936 கொண்ட 02 மோடார் சைக்கில்கள் தொடர்பான தகவல்களை இது வரை கண்டறிந்திருக்கவில்லை. | தற்போது இருக்கின்ற அமைச்சை கண்டறிந்தவுடனே கடடிதமொன்றை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும். KA-0127 வாகனம் தொடர்பாகவும் சரியான தகவல்களை இது வரை கண்டறிய முடியாதுள்ளதுடன் எதிர்காலத்தில் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். 252-6507 தங்கள்ள பிரதேச சபைக்கு வழங்கியுள்ள கெப் வண்டியொன்றாகும். அதனை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு அப்பிரதேச சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. WK-1941 மற்றும் WK-1936 கொண்ட 02 மோடார் சைக்கில்கள் தொடர்பான சரியான தகவல்கள் இது வரை கிடைக்காததுடன் அத் தகவல்கள் கிடைத்தவுடனே அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | 2017 திசெம்பர் 21 திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் ஏற்பாடுகளிற்கு மாற்றமாக அமைச்சினால் வேறொறு அமைச்சிற்கு சொந்தமான 02 வாகனங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தன. | அவ்வாகனங்களை தற்காலிகமாக பெற்றுள்ளதால் மீண்டும் ஒப்படைக்க முயற்சி எடுக்கப்படுகின்றது. | வாகனங்களை சுவீகரிக்க அல்லது மீள் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | நிதிக் குத்தகை முறையின் கீழ் நிதி அமைச்சினால் இவ்வமைச்சிற்கு மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களிற்கு வழங்கியிருந்த 27 வாகனங்களின் குத்தகை தவணை செலுத்தலை, 2021 நவம்பர் அளவில் பூர்த்தி செய்து உரிமையை சுவீகரிக்க ஆலோசனை வழங்கியிருந்த போதும் அவ்வாகனங்களை 2022 ஜுலை 31 திகதியளவிலும் அமைச்சிற்கு சுவீகரித்திருக்கவில்லை. | குத்தகை முறையின் கீழ் பெற்றுக் கொண்ட வாகனங்களிற்குரிய பதிவு சான்றிதழ் மற்றும் ஆவணங்களை குறித்த வங்கி ஊடாக வரவழைத்துக் கொண்டு மோடார் வாகன போக்குவரத்து திணைக்ளத்திற்கு சமர்பிக்கப்பட்டுள்ளது. | அவ்வாகனங்களை சுவீகரித்தலை விரையில் பூர்த்தி செய்ய வேண்டும். |

## 3.8 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2017 ஆண்டில் ரூபா 104 மில்லியன் செலவில் கொள்வனவு செய்த காத்தாண்குடி நகர சபையின் கீழ் பொருத்தவிருந்த கவசிமா இயந்திரத்திற்கு தீ இழப்பொன்று ஏற்பட்டிருந்ததுடன், ரூபா 30.62 செலுத்தி சேதமடைந்த உதிரிப்பாகங்களை பெற்றுக் கொண்டிருந்த போதும் நிதிப்பிரமாணம் பிரகாரம் ஒழுங்கான விசாரணை மேற்கொண்டிருக்கவில்லை. | 2020.06.07 திகதி தீப்பற்றியமை தொடர்பில் நி.பி. 104(3) கீழ் நட்டங்கள் தொடர்பான ஆரம்ப அறிக்கையிடலை மாத்திரம் 2020 ஆண்டில் மேற்கொண்டுள்ளதாக அவதானிக்கிறேன். | ஒழுங்கான பரிசோதனை ஒன்றை நடாத்தி பொறுப்புதாரர்களை இனங்காண மற்றும் இழப்பை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.9 முகாமைத்துவ பலவீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | உள்ளூராட்சி தொடர்பாக இலங்கை நிறுவனத்திற்கு கொழும்பு 7 மலலசேகர மாவத்தையில் 8 மாடிகளுடன் கூடிய கட்டிடமொன்றை நிர்மாணிக்க 2013 ஆண்டு ஆரம்பித்திருந்ததுடன் பெறுகைகள் முறைகேடுகள் உள்ளிட்ட பல முறைகேடுகள் காரணமாக பயில் அத்திவாரம் இடப்பட்ட பின்னர் செயலாளரினால் முறைகேடுகள் ஏற்பட்டுள்ளதாக 2020 ஆகஸ்ட் 31 திகதி அறிவித்திருந்த போதும் அது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் எதனையும் செய்திருக்கவில்லை. | அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், ஒப்பந்ததாரர் மேற்கொண்ட செயற்பாடுகளின் உண்மை பெறுமதியை மற்றும் பூர்த்தி செய்யவுள்ள செயற்பாடுகளை மதிப்பிடலும், தற்போது செய்துள்ள கொடுப்பனவுகள் மற்றும் ஒப்பந்ததாரர் சமர்பித்துள்ள பட்டியல் தொடர்பாக பரிந்துரை வழங்களையும் அக்குழு மூலம் செய்ய வேண்டியுள்ளது. அதன் பிரகாரம் அக்குழுவினால் அறிக்கை சமர்ப்பித்த பின்னர் முன்நடவடிக்கை தொடர்பாக தீர்மானமொன்றை எடுக்க வேண்டியுள்ளது. | முறைகேடுகளுக்கு எதிராக முறையாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2014 திசெம்பர் 14 திகதிய பெறுகைகள் தீர்மானத்தின் பிரகாரம் 8 மாடிகளுடன் கூடிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்த தொகை ரூபா 135.94 மில்லியனாகும். பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய மதியுரை அலுவலகத்தால் 2021 ஜுன் 16 திகதி வழங்கியுள்ள மதிப்பீட்டின் பிரகாரம் 6 மாடிகளுடன் இக்கட்டிடத்தை பூர்த்தி செய்ய மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 626.33 ஆகும். சரியான பெறுகைகள் தீர்மானமொன்றை எடுக்காத காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை பொறுப்புதார தரப்பினரிடமிருந்து அறவிட தேவையான சட்ட நடவடிக்கை இது வரை எடுத்திருக்கவில்லை. | **2014.12.14** பெறுகைகள் அவதானிப்பின் பிரகாரம் ஒப்பந்தத்தின் திருத்திய புதிய பெறுமதி ரூபா **98.44** மில்லியனாவதுடன் அது ஒப்பந்தத்திற்கு உட்படுவது அத்திவார தூண் (**Pile**) **08** மாடிகளுக்கு நிர்மாணித்தலும் **04** மாடிகளிற்கு கட்டமைப்பை மாத்திரம் நிர்மாணித்தலுமாகும். அக்கட்டிடத்தின் கூறை மற்றும் மாடிகளின் இறுதி முடிவு (**Finishing Work**) அந்த ஒப்பந்தத்திற்கு உள்ளடங்கவில்லை. எவ்வாறாயினும் **2018.01.03** திகதிய அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் இது தொடர்பாக முற்தீர்மானம் எடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அரசிற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | புறஎழுச்சி செயற்திட்டத்தின் கீழ் கிரம பேருந்து தரிப்பிடம் மற்றும் வெலிபிடிய திவிதுர பிரதேச சபை புதிய கட்டிடத்திற்கு மின் தூக்கியொன்று நிர்மாணிக்கையில் ஏற்பட்டுள்ள முறைகேடுகளுடன் தொடர்புடைய பொறுப்புதார தரப்பினர் அதாவது, ஒப்பந்ததாரர், மதியுரை நிறுவனம், கொடுப்பனவை அங்கீகரித்த, பரிந்துரைத்த மற்றும் உறுதி செய்த அலுவலர்களுக்கு எதிராக முறையாக நடவடிக்கை எடுக்காது பிரதேச சபைக்கு மிகைஅறவீடு செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்தது. | புறஎழுச்சி செயற்திட்டத்தின் கீழ் கிரம பேருந்து தரிப்பிடம் மற்றும் வெலிபிடிய திவிதுர பிரதேச சபை புதிய கட்டிடத்திற்கு மின் தூக்கியொன்று நிர்மாணிக்கையில் ஏற்பட்டுள்ள முறைகேடுகளுடன் தொடர்புடைய பொறுப்புதார தரப்பினரிற்கு எதிராக எடுக்க முடியமான சட்ட நடவடிக்கை தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைத்துள்ளது. அங்கு சட்டமா அதிபரினால் வழங்கப்பட்ட ஆலோசனை பிரகாரம் குறித்த ஒப்பந்ததாரர் மற்றும் மதியுரை நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் அக்கட்டிடம் மற்றும் மின் தூக்கி நிர்மாணித்தல் தொடர்பாக ஆரம்ப தீர்மானத்தை எடுத்துள்ள பிரதேச சபைக்கு மிகைஅறவீடு செய்ய சட்டமா அதிபரிடமிருந்து கிடைத்த | பொறுப்புதார தரப்பினரிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆலோசனை பிரகாரம் அத்தீர்மானத்தை எடுத்துள்ளது. | |
| (ஈ) | **இலத்திரனியல் வாசிகசாலை நிர்மாணித்தல்**<br>---------------------------------------------------- | | |
| (i) | 2021 செப்டம்பர் மாதம் நிர்மாணம் ஆரம்பிக்க உத்தேசித்திருந்த 50 வாசிகசாலைகளில் 42 இனது நிர்மாணப் பணிகள் மாத்திரம் இடம்பெறுவதுடன் 08 இனது நிர்மாணங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. எனினும் 50 உத்தேச வாசிகசாலைகளுக்கும் தேவையான தொழிநுட்ப உபகரணங்கள் மற்றும் அலுவலக தளபாடங்களை இலங்கை வர்த்தக கூட்டுத்தாபனத்திலிருந்து ரூபா 16.3 மில்லியனிற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. கட்டிட நிர்மாணங்களின் முன்னேற்றம் இல்லாத சந்தர்ப்பங்களில் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்து விளைவற்று வைத்திருப்பதில் தொழிநுட்ப உபகரணங்களின் உத்தரவாத காலம் பிந்திச் செல்வதாக அவதானிக்கப்பட்டது.<br><br>இவ் உபகரணங்கள் விளைவற்றதாக தெரிவதை தடுக்க மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்களிற்கு ஒப்படைக்க அமைச்சின் பெறுகைகள் சபை தீர்மானித்திருந்ததுடன், அலுவலக உபகரணங்கள் மற்றும் தொழிநுட்ப உபகரணங்கள் கொள்வனவு செய்ய பொருத்தமான சந்தர்ப்பம் வர முன்னர் கொள்வனவு செய்ய தீர்மானித்து, அங்கீகரித்து, பரிந்துரைத்த அனைத்து அலுவலர்களும் தொடர்பாக பொறுப்பேற்க வேண்டியுள்ளது. | கொள்வனவு செய்த வாசிகசாலை உபகரணங்கள் விளைவற்று நிலவுவதை தடுப்பதற்காக வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட வாசிகசாலைகளை விரைவில் திறக்க நடவடிக்கை எடுக்குமாறு தற்போதும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. வேலைகள் பூர்த்தியாகாத வாசிகசாலைகளிற்குரிய ஈ வாசிகசாலைகளிற்கு பாவணைக்கு வழங்கப்பட்டுள்ளது. திட்டமிட்டவாறு 08 வாசிகசாலை கட்டிடங்களின் நிர்மாணப் பணிகளை நிர்மாணிக்க முடியாது போனதாக மற்றும் 08 உபகரணத் தொகுதிகள் எஞ்சியுள்ளதாக பெறுகைகள் குழுவின் கவனத்திற்கு முன்வைக்கபட்டுள்ளது. அவற்றை வேறு உள்ளூராட்சி நிறுவனங்களிற்கு விநியோகிக்க பெறுகைகள் குழு அறிவித்துள்ளது.<br><br>இச் செயற்திட்டத்தை முடிவுறுத்த குறித்த உபகரணங்கள் முக்கியமாவதுடன் அச் சந்தர்பத்தில் உபரணங்களை கொள்வனவு செய்யவில்லை எனின் நாட்டில் நிலவும் தற்போதைய பொருளாதார நிலைமை பிரகாரம் கொள்வனவு செய்ய கவனிக்கத்தக்க காலமொன்று செலவாவதுடன் அதற்காக | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| | பாரிய பணமும் செலவிட வேண்டி ஏற்படும். | |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இந்த அமைச்சின் கீழ் 08 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள் செயற்படுவதுடன் அதற்காக வேறு வேறாக செயற்திட்ட அலுவலகம் மற்றும் ஆளணியினை நடாத்திச் சென்ற போதிலும் அந்த செயற்திட்டங்களில் போதியளவு உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தற்போது உள்ளக கணக்காய்வு பிரிவிற்காக பிரதான உள்ளக கணக்காய்வாளரின் கீழ் இரண்டு கணக்காளர்களை ஆட்சேர்த்து அப்பிரிவை வலுவூட்டியுள்ளதுடன் அதன் பிரகாரம் குறித்த செயற்திட்டங்களின் உள்ளக கணக்காய்வுகளை மேற்கொள்ளல் விரிவாக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் செயற்திட்டங்களில் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இவ் அமைச்சில் கடமையாற்றும் 26 நிறைவேற்று அலுவலர்களிற்கு இடையில் 08 பேர்கள் 05 ஆண்டுகளிற்கு விஞ்சிய சேவைக் காலமொன்றாக இவ்வமைச்சில் சேவையாற்றுவதுடன், பிரதான நிதி அலுவலரின் இவ்வமைச்சின் தொடரான சேவைக் காலம் 20 ஆண்டுகளாகும். | ரூபா 300 மில்லியனிற்கு அதிக வருடாந்த மதிப்பீடொன்றுடன் கூடிய இவ்வாறான பாரிய அமைச்சிற்கு அனுபமிக்க அலுவலர்களின் சேவை மிக முக்கியமானது. அவ்வாறே இவ்வமைச்சு அடிக்கடி மாறும் அமைச்சாக இருப்பதும் இடமாற்றம் முறையல்லாதிருப்பதற்கு காரணமானது. எவ்வாறாயினும் வருடாந்த இடமாற்றம் மீது எதிர்காலத்தில் இவ்வலுவலர்களின் இடமாற்றம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | அலுவலர்கள் நீண்ட காலமாக ஒரே நிறுவனத்தில் தொடர்திருக்காத வகையில் காலத்திற்கு காலம் இடமாற்றம் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சட்டப் பிரிவு, சட்ட அலுவலர் உள்ளடங்களாக 10 அலுவலர்கள் மற்றும் 01 அலுவலக செயற்பாட்டு உதவியாளருடன் உள்ளடங்கியிருந்ததுடன், 05 அவ்வலுவலர்களின் கடமை பட்டியல் 2021 திசெம்பர் 31 திகதியளவிலும் நாளாதுவரையாக்கி இருக்கவில்லை. ஒரு அலுவலருக்கு கோவை பதிவேட்டின் மூலம் கோவைகளை வழங்குவது தவிர முறையாக கடமை கையளிப்பு செய்திருக்கவில்லை. சட்ட பிரிவிற்கு தேவைக்கு அதிகமாக அலுவலர்கள் இணைக்கப்பட்டிருந்தனர். | சட்டப் பிரிவின் கடமைகள் அந்த அந்த ஆண்டு செயல் நடவடிக்கை பிரகாரம் மாற்றமடைவதுடன் ஒவ்வொறு சந்தர்ப்பங்களில் அதன் கடமைகளுக்கு பொருந்தும் வகையில் குறித்த கடமைகள் உச்ச வினைத்திறனுடன் மேற்கொள்ள முடியுமான மாற்று அலுவலர்களை ஈடுபடுத்த நேரிடுகிறது. | கடமைகளுக்கு பொருந்தும் வகையில் ஆளணியை இணைக்கவும் மேலதிக ஆளணியை தேவையான இடங்களிற்கு இணைத்தலும் மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | 2018 ஆகஸ்ட் 06 திகதி எழுந்துவரும் வலயங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு இணைத்துக் கொண்ட முகாமைத்துவ உதவி அலுவலர் நியமன திகதி முதல் இது வரை மேலதிக செயலாளரின் (செயற்திட்டம்) தனிப்பட்ட உதவியாளராக சேவையில் ஈடுபட்டிருந்தார். செயற்திட்டத்தினால் அவ் அலுவலரிற்கு 2018 மற்றும் 2019 ஆண்டிற்காக ரூபா 787,335 வும், 2020 ஆண்டிற்காக ரூபா 787,335 வும் செலுத்தப்பட்டிருந்தது. 2021 ஆண்டிற்காக ரூபா 592,920 செலுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்ட கடமைக்காக வேறு அனுபவமிக்க அலுவலர் ஒருவர் இணைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக செயலாளரின் (செயற்திட்டம்) கடமைக்காக இவ்வலுவலர் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். இது தொடர்பாக பொருத்தமான வகையில் முன்நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது. | செயற்திட்டத்திற்காக ஆட்சேர்க்கப்பட்ட அலுவலர் அதற்காக விடுவிக்கப்பட வேண்டும். |